தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

Tamil Study Centre, Homebush Inc.

Postal Address: P O Box 4032, Homebush NSW 2140

www.tsch.org.au **info@tsch.org.au**

அரையாண்டுப் பரீட்சை 2025

ஆண்டு: 7 திகதி: 21.06.2025

நேரம்: 2 மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திருமதி மஞ்சு விஜயகுமார்

மாணவர் பெயர்: _____

வினாக்கள்	வினா புள்ளி	பெற்ற புள்ளி
வினா 1	20	
வினா 2	20	
வினா 3	10	
வினா 4	10	
வினா 5	20	
வினா 6	20	
மொத்தப் புள்ளிகள்	**100**	

வினா இல	1	புள்ளிகள்	20	பக்கம்	2

1. இங்கு தரப்படும் குறுகிய ஆடியோ உரையை கேட்டு, பின்வரும் வினாக்களுக்கு விடை தருக

1. அவுஸ்திரேலியாவின் பழமையான குடிமக்கள் யாராகக் கருதப்படுகிறார்கள்?

……
……
……

2. அபோரிஜினல் மக்கள் எந்த வகையான வாழ்க்கை முறையைப் பின்பற்றினர்?

……
……
……

3. 'ட்ரீம் டைம்' (Dream Time) என்றால் என்ன?

……
……
……..

4. அபோரிஜினல் மக்களின் கலாச்சாரத்தில் எந்தெந்த அம்சங்கள் உள்ளன?

……
……
……

5. இன்று அவர்களின் பாரம்பரியம் எப்படி உள்ளன?

……
……
……

வினா இல	2	புள்ளிகள்	20	பக்கம்	3

பின்வரும் உரைப்பகுதியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

புலம் பெயர்ந்த தமிழர்கள்

புலம் பெயர்ந்த தமிழர்கள் என்பது தங்கள் தாய் நாட்டிலிருந்து வேலைவாய்ப்பு, கல்வி அல்லது வாழ்க்கைத் தேவைகளுக்காக தங்கள் சொந்த நாட்டை விட்டு வெளிநாடுகளுக்கு வந்தவர்கள். அவர்கள் உலகத்தின் பல பகுதிகளில் வாழ்ந்து, தங்கள் பணிகளை செய்கின்றனர். அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, ஐரோப்பியா போன்ற நாடுகளில் தமிழர்கள் மிகுதியாக வாழ்கின்றனர்.

தமிழர்கள் தெய்வ பக்தி, தந்தை, தாய் பேணுதல், முதியோரை கனம் பண்ணுதல், விருந்தோம்பல், உற்றார் உறவினருடன் கூடிவாழ்தல் போன்ற பல உயர் பண்புகள் உடையவர்கள். இன்று புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் இவற்றை முழுமையாகப் பின்பற்ற முடியாமல் இளைஞர்கள் மனம் தடுமாறுகிறார்கள்.

புலம் பெயர்ந்த தமிழர்கள் தங்கள் தாய்நாட்டின் பொருளாதாரம் மற்றும் சமூக முன்னேற்றத்தில் பெரும் பங்கு வகிக்கின்றனர். அவர்கள் வாழும் நாட்டிற்கும், தாய்நாட்டிற்கும் இடையே ஒரு பாலமாக அமைந்துள்ளனர்.

1. **புலம் பெயர்ந்த தமிழர்கள் எதற்காக தாய்நாட்டை விட்டு வெளிநாடுகளுக்கு செல்கிறார்கள்**
   a. சுற்றிலா செல்வதற்காக
   b. வேலை, கல்வி மற்றும் வாழ்க்கைத் தேவைகளுக்காக
   c. விளையாட்டு போட்டிக்காக
   d. உறவினர்களை பார்ப்பதற்காக

2. **புலம் பெயர்ந்த தமிழர்கள் அதிகமாக வாழும் நாடாக எந்த நாட்டைக் கூறலாம்?**
   a. அமெரிக்கா
   b. கனடா
   c. அவுஸ்திரேலியா
   d. மேற்கூறிய யாவும்

3. **புலம் பெயர்ந்த தமிழர்கள் தங்கள் கலாசாரத்தைக் காப்பதற்காக என்ன செய்கிறார்கள்?**
   a. தமிழ் பாடல்களை தவிர்க்கிறார்கள்
   b. தங்கள் பாரம்பரியத்தை மறக்கிறார்கள்
   c. தமிழ் பள்ளிகள் மற்றும் திருவிழாக்கள் நடத்துகிறார்கள்
   d. மற்ற மொழியை மட்டும் பேசுகிறார்கள்

4. **புலம் பெயர்ந்த தமிழர்கள் தங்கள் தாய்நாட்டுடன் எப்படி தொடர்புபடுகிறார்கள்?**
   a. தொடர்பு இல்லாமல் வாழ்கிறார்கள்
   b. நாட்டின் பொருளாதாரத்தில் பங்காற்றுகிறார்கள்
   c. தாய்நாட்டை மறக்கிறார்கள்
   d. புதிய நாடுகளை தமிழ்நாடு என அழைக்கிறார்கள்

5. **தமிழர்களின் உயர் பண்புகளாக எவற்றைக் கூறலாம்**
   a. தாய்நாட்டிக்கு செல்லும் ஆர்வம் குறைவது
   b. தந்தை, தாய் பேணுதல், முதியோரை கனம் பண்ணுதல், விருந்தோம்பல்,
   c. தமிழர்கள் பிறமொழி பேசுவதில் ஆர்வம் காட்டுகிறார்கள்
   d. தமிழர்கள் மட்டுமல்லாமல் மற்றவர்கள் தமிழ் பேச ஆரம்பிக்கிறார்கள்

வினா இல	3	புள்ளிகள்	10	பக்கம்	4

பின்வரும் உரைப்பகுதியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

தமிழரின் வளர்ச்சியில் ஊடகங்களின் பங்கு

தமிழ் ஊடகங்கள் என்பது தமிழ் மொழியில் செய்திகள், தகவல்கள், நிகழ்ச்சிகள் மற்றும் பொழுதுபோக்கு ஆகிய தகவல்களைப் பரிமாற உதவும் சாதனங்கள் ஆகும். பத்திரிகைகள், தொலைக்காட்சிகள், வானொலிகள், இணையதளங்கள், முகநூல்கள் போன்றவற்றை தமிழ் ஊடகங்கள் என்று குறிப்பிடலாம்.

தமிழ் பத்திரிகைகள் தினமும் காலை மக்கள் வாசிப்பதற்காக வெளியிடப்படுகின்றன. இதில் அரசியல், விளையாட்டு, கல்வி, மற்றும் சினிமா போன்ற செய்திகள் இடம் பெறுகின்றன.

தமிழ் தொலைக்காட்சிகள், செய்திகள், சின்னத்திரை நிகழ்ச்சிகள், குழந்தைகள் நிகழ்ச்சிகள் மற்றும் பாட்டு நிகழ்ச்சிகளை வழங்குகின்றன.

அவுஸ்திரேலியாவிலும் தமிழ் ஊடகங்கள் வளர்ந்து வருகின்றன. சில தமிழர்கள் அவுஸ்திரேலியாவில் பத்திரிகைகள் மற்றும் வானொலி நிகழ்ச்சிகளை நடத்துகிறார்கள். உதாரணமாக அவுஸ்திரேலிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் (யுவுடீஊ) என்பது சிட்னியில் இயங்கிவரும் தமிழ் வானொலி நிலையமாகும் இது செய்திகள், பாடல்கள் மற்றும் சமூக நிகழ்ச்சிகளை ஒளிபரப்புகிறது. மேலும், அவுஸ்திரேலிய தமிழ் சமூகத்திற்காக சில இணையதளங்கள், லுழரவுரடிந சேனல்கள், மற்றும் சமூக ஊடக பக்கங்களும் இயங்குகின்றன. இவை அவுஸ்திரேலியா தமிழர்களை இணைத்து, தமிழ்மொழி மற்றும் கலாசாரத்தை பேணி வளர்க்க உதவுகின்றன.

மாணவர்கள் இணையம் மூலம் தமிழ்ப் பாடங்களை எளிதாக கற்றுக் கொள்ள முடிகிறது. மேலும், இவர்கள் தமிழில் உள்ள இலக்கியங்களை, பாடல்களை மற்றும் வரலாற்றுத் தகவல்களை இணையத்தின் மூலம் பெற்றுக் கொள்கிறர்கள்.

இன்று, தமிழ் ஊடகங்கள் இணையத்தின் மூலம் உலகம் முழுவதும் காணப்படுகின்றன. தமிழர்களுக்கான இணையதளங்கள் தமிழ் மொழியைப் பரப்புவதற்கும், தமிழர்களை இணைக்கும் பிணைப்பாகவும் பயனபடுகின்றன.

1. தமிழ் ஊடகங்கள் என்றால் என்ன?

……
……
……

2. தமிழ் ஊடகங்கள் சிலவற்றின் பெயர்களை தருக?

……
……
……

3. ATBC என்றால் என்ன? அது எங்கே அமைந்துள்ளது?

……
……
……
……

4. மாணவர்கள் ‘இணையம்’ மூலம் எதனை பெற்றுக் கொள்கிறார்கள்?

……
……
……

5. 1. ஊடகங்களால் ஏற்படும் நன்மைகள் இரண்டு (2) தருக

a……
……

b……
……
……

11. ஊடகங்களால் ஏற்படும் தீமைகள் இரண்டு (2) தருக.

a……
……
……

b……
……
……..

வினா இல	4	புள்ளிகள்	10	பக்கம்	6

கீழே கொடுக்கப்பட்டுள்ள அழைப்பிதழை வாசித்து பின்வரும் வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையை எழுதுக.



1. இந்த விழா யாரால் நடத்தப்படவுள்ளது?

   .....

   .....

2. இந்நிகழ்ச்சி எங்கு நடைபெறவுள்ளது?

   .....

   .....

   .....

3. எப்போது? எத்தனை மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளது?

   .....

   .....

4. எதற்காக இவ்விழாவை நடத்துகிறார்கள்?

   .....

   .....

5. அங்கே வழங்கப்படவுள்ள உணவுகள் எவை?

   .....

   .....

வினா இல	5	புள்ளிகள்	20	பக்கம்	7

உங்கள் பிறந்த நாளுக்கு வரும்படி உமது நண்பருக்கு/நண்பிக்கு 75 சொற்களுக்கு குறையாமல் கடிதம் ஒன்றை எழுதுக.

வினா இல	6	புள்ளிகள்	20	பக்கம்	8

பின்வருவனவற்றில் ஏதாவது ஒன்றைப்பற்றி 125 சொற்களுக்கு குறையாமல் ஒரு கட்டுரை எழுதுக.

1. புலம் பெயர்ந்த நாடுகளில் தமிழ் ஊடகங்களின் பங்கு.
2. எனது பூர்வீகத்திற்கு சென்று வந்த அனுபவம்.
3. அண்மையில் நடந்து முடிந்த கலைவிழாவும் அதன் அனுபவமும்.